

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



மின்னிதழ்

ஆகஸ்ட் 2025







## செயலர் பக்கம்

அருள்பணி. சு. மரிய சூசை

அன்பு உறவுகளே!

"முதலில் அவர்கள் கம்யூனிஸ்டுகளைப் பிடிக்க வந்தார்கள். நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் நான் கம்யூனிஸ்ட் அல்ல. பின்னர் அவர்கள் தொழிற்சங்கவாதிகளைப் பிடிக்க வந்தார்கள். நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் நான் தொழிற்சங்கவாதி அல்ல. பின்னர் அவர்கள் யூதர்களைப் பிடிக்க வந்தார்கள். நான் எதுவும் பேசவில்லை. ஏனென்றால் நான் யூதன் அல்ல. இறுதியாக அவர்கள் என்னைப் பிடிக்க வந்தார்கள். அப்பொழுது எனக்காக பேச எவருமே இல்லை." என்று எழுதுகிறார் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த லூத்தரன் திரு அவையின் போதகரும் இறையியலாரும் ஆகிய மார்ட்டின் நியேமொல்லர்.ஒரு சமூகத்தில் தனி ஒரு நபரின் பொறுப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இவரது வார்த்தைகள் எடுத்துரைக்கின்றன. தனிப்பட்ட மனிதர்களிடம் விளங்க வேண்டிய சமூக அக்கறையையும், சமூக பொறுப்பையும், சமூக ஈடுபாட்டையும் இவருடைய வார்த்தைகள் வலிமையாய் எதிரொலிக்கின்றன.

விடுதலை பெற்ற இந்தியத் திருநாட்டில், சமூக மாற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்குமான நம்முடைய தனிப்பட்ட பங்களிப்பு எவ்வாறு உள்ளது? குறிப்பாக அடித்தட்டு மக்களின் அன்றாட வாழ்வு அழகாகிட வேண்டும். சமத்துவமும் சகோதரத்துவமும் எங்கும் நிலவிட வேண்டும். பெண்களின் மாண்பு காக்கப்பட வேண்டும். சமூக நீதியும் சமய சகிப்புத்தன்மையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆகவே மானுட விடுதலை வாழ்வுக்கு எதிரானவற்றைக் கண்டு மௌனம் கலைப்போம். தனிநபரின் சமூக பொறுப்பை உணர்ந்து செயல்படுவோம்.

**அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா வாழ்த்துகள்!**

**இந்தியத் திருநாட்டின் விடுதலைத் திருநாள் வாழ்த்துகள்!**

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



# யூபிலி ஆண்டு அறிவோம்

## புனித கதவு வரலாறு

யூபிலி ஆண்டு தொடங்கி 100 ஆண்டுகளுக்கு பிறகு "புனித கதவு திறத்தல்" என்ற சடங்கை திருத்தந்தை 5 ஆம் மார்டின் அவர்கள், கி.பி.1425 ஆம் ஆண்டில் புனித இலாத்தரன் பசிலிக்காவில் தொடங்கி வைத்தார்..

திருத்தந்தை 6ஆம் அலெக்சாண்டர் கி.பி. 1500 ஆம் ஆண்டின் யூபிலியை முன்னிட்டு, உரோமையில் உள்ள நான்கு பெரிய பசிலிக்காக்களிலும் புனித கதவை திறக்க ஆணையிட்டார்.

### புனித கதவு திறக்கும் சடங்கு முறைகள்:





புனித கதவின் முன் ஒரு சுவர் எழுப்பப்பட்டிருக்கும் திருத்தந்தை திருப்பாடல் உரைத்தபடியே ஒரு வெள்ளி சுத்தியலால் மும்முறை அந்த சுவரை தட்டுவார். பின்பு கட்டிட பணியாளர்கள் இந்த சுவரை தகர்ப்பார்கள். இந்த செயலானது நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மிகக் கடின முயற்சியினால் விடுபட்டு, நிலைவாழ்வுக்குரிய வழியை அடைய வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

திருத்தந்தையின் கையிலிருக்கும் சுத்தியல், கடவுள் அவருக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தையும், கடின உள்ளங்களையும், கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள பிரிவினைச் சுவரை நீக்கும் வல்லமையையும் வழங்கியுள்ளதை அடையாளப்படுத்துகின்றது.

கி.பி. 1975 ஆம் ஆண்டில் புனித கதவைத் திறக்கும் சடங்கின்போது, அச்சுவர் இடிந்து விழுந்து, திருத்தந்தை ஆறாம் பால் உள்பட பிறருக்கும் ஆபத்தாக அமைந்தது.



ஆகவே, கி.பி. 2000 ஆம் ஆண்டின் யூபிலியின்போது, திருத்தந்தை இரண்டாம் ஜான் பால், இந்த வழக்கத்தை எளிதாக்கினார்.அதன்படி சுவர் முன்கூட்டியே தகர்க்கப்பட்டு இருக்கும். பின்பு திருத்தந்தை புனித கதவைத் தம்முடைய கைகளால் திறந்து வைப்பார்.

புனித பேதுரு பெருங்கோவிலிலுள்ள ஐந்து கதவுகளை இயேசுவின் ஐந்து திருக்காயங்களுடன் சிலர் ஒப்பிடுவதுண்டு. இப்பெருங்கோவிலுள்ள புனித கதவைத் திறக்கும் நிகழ்வானது, இயேசுவின் விலா ஊடுருவக் குத்தப்பட்டதை, அடையாளப் படுத்துகின்றதென்றும் சிலர் குறிப்பிடுவதுண்டு.

திருவிலாவிலிருந்து வழிந்தோடிய திருஇரத்தமும் தண்ணீரும் மனித குலத்தின் மீட்பிற்கு வழிவகுத்தது. புனித கதவைத் திறப்பதும் இதையே நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. புனித பேதுரு பெருங்கோவிலிலுள்ள கதவு, 16 வெண்கலப் பலகைகளால் அழகுப்படுத்தப்பட்டிருக்கும்.

## ஞாயிறு மறைக்கல்வி

கடந்த ஈராண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் ஞாயிறு மறைக்கல்வியில் எல்லா மாணாக்கர்களும் பாட நூலை வாங்கிப் பயன்படுத்தும் நோக்கில் “அருள் வாழ்வு மறைக்கல்வி” என்னும் தலைப்பில் பாட நூல்கள் 5 குழுவினருக்கும் உருவாக்கப்பட்டன. சென்ற ஆண்டைப் போன்று இந்த ஆண்டும் “ஞாயிறு மறைக்கல்வி” என்று அச்சிடப்பட்ட பைகளும் தயாரிக்கப்பட்டன. பயிற்சியின்போது ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு செட் புத்தகமும், ஒரு பையும் இலவசமாக வழங்கப்பட்டன. மாணாக்கர் கைகளில் பைகளும், பாட ஏடுகளும் இருப்பது ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளுக்கு அவர்கள் ஆர்வத்துடன் தொடர்ந்து வருவதற்கும், மறைக்கல்வி வகுப்புகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்பதற்கும், பொது மற்றும் சிறப்புத் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கும் பேருதவியாக இருக்கும். ஆகவே மாணாக்கர்கள் அனைவரும் இவற்றை வாங்கிப் பயன்படுத்த உற்சாகப்படுத்த பங்குப்பணியாளர்களையும், மறைக்கல்வி ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.







## இவ்வாண்டுக்கான சிறப்பு நிகழ்வுகள்

செயலர் தந்தை அல்லது வேதியர்கள் அல்லது தன்னார்வ வேதியர்கள் தாங்களது பங்கின் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளைப் பார்வையிட்டு உற்சாகப்படுத்தும் நோக்கில், பங்குப்பணியாளரின் முன்அனுமதி பெற்று பங்குகளுக்கு வருவார்கள். வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கு எம்மைப் பங்குப் பணியாளர்களும் விரும்பினால் அழைக்கலாம். இவ்வாண்டும் மறைமாவட்ட அளவிலான யூபிலி ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழா அக்டோபர் 05 அன்று திருச்சியிலும், அக்டோபர் 12 அன்று மணப்பாறையிலும் கொண்டாடப்படும். ஞாயிறு மறைக்கல்வி மாணாக்கர்களை உற்சாகப்படுத்த அவர்களுக்கு (15-02-2026) அன்று பங்கு அளவில் பொதுத் தேர்வும், (22-02-2026) அன்று மறைமாவட்ட அளவில் சிறப்புத் தேர்வும் நடத்தப்படும். மேற்கண்ட நிகழ்வுகளுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு பங்குப்பணியாளர்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

## மனமார்ந்த வாழ்த்தும், பாராட்டுகளும்

திருச்சி மறைமாவட்டத்தில் மேலப்புதூர், துரைசாமிபுரம், பழைய கோவில், புத்தூர், தெப்பக்குளம், தெரசாள்புரம், உறையூர், அருங்கொடை இல்லம், அம்சம், கிராப்பட்டி, எடமலைப்பட்டிப் புதூர், ஜெகன் மாதா, கே.கே.நகர், கல்லுக்குழி, கருமண்டபம், நாகமங்கலம், பெரிய மிளகுபாறை, ஆலம்பட்டி புதூர், அம்பிகாபுரம், அய்யம்பட்டி, ஆர்.கே.புரம், கைலாசபுரம், காமராஜ் நகர், காட்டூர், கொட்டப்பட்டு, லூர்து நகர், துப்பாக்கித் தொழிற்சாலை, பொன்மலை, செம்பட்டு, திருநகர், ஆவூர், கீரனூர், மலம்பட்டி, நாஞ்சூர், வயலோகம், மாத்தூர், கருங்குளம், சோமரசம் பேட்டை, சுப்ரமணியபுரம், க.உடையான்பட்டி, மணப்பாறை, என்.பூலாம்பட்டி, பெரிய குளத்துப்பட்டி, பெரிய அணைக்கரைப்பட்டி, துவரங்குறிச்சி, விராலிமலை, ப.உடையான்பட்டி, செங்கற்பட்டு மறைமாவட்டத்தில் குரோம்பேட்டை, மறைமலைநகர், சென்னை- மயிலை உயர் மறைமாவட்டத்தில் கிட்லபாக்கம், ஆரோக்கிய அன்னை ஆலயம், சேலம் மறைமாவட்டம் தூய ஆவியார் ஆலயம் ஆகிய பங்குத் தளங்களில் நம் ஞாயிறு மறைக்கல்விப் பாட நூல்கள் மாணவர்கள் கைகளில் தவழ்கின்றன.












POCO
SHOT ON POCO M2 PRO










இயன்றவரை அனைத்து மறைக்கல்வி மாணாக்கர்களுக்கும் ஞாயிறு மறைக்கல்விப் பாட நூல்களை வாங்கிக் கொடுத்துள்ள மேற்கண்ட பங்குகளின் பங்குப் பணியாளர்களுக்கும், ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் எம்முடைய சிறப்பான நன்றியும், வாழ்த்துக்களும்... குழந்தைகளுக்கு மறைக்கல்வி கற்பிப்பதில் இவர்கள் காட்டும், ஆர்வமும், ஈடுபாடும் உண்மையில் பாராட்டுக்குரியது. நம் மறைமாவட்டம் கடந்தும் பல இடங்களில் நாம் தயாரித்த பாட நூல்கள் பயன்படுத்தப்படுவது நமக்கு மகிழ்வும், பெருமையும் தருவதாக உள்ளது.






# மறைக்கல்வி சந்திப்புகள்

## பள்ளி மறைக்கல்வி தொடக்கவிழா
## புனித ஆரோக்கிய மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கருமண்டபம்








## ஞாயிறு மறைக்கல்வி தொடக்கவிழா - மேலப்புதூர்




## ஞாயிறு மறைக்கல்வி தொடக்கவிழா - புத்தூர்



# தன்னார்வ வேதியர்களின் யூபிலி திருப்பயணம் - மலையடிப்பட்டி

06-07-2025 ஞாயிறு அன்று திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவின் யூபிலி சிறப்புத் திருப்பயணமாக தன்னார்வ வேதியர்கள் 49 நபர்களும், பணிக்குழுவின் துறவறத் தன்னார்வலர்கள் 2 நபர்களும், பணிக்குழுச் செயலர் அவர்களுடன் இணைந்து மலையடிப்பட்டி புனித தோமையார் திருத்தலத்திற்குச் சென்றனர். காலை 09.00 மணிக்கு நல்லாயன் நிலையத்திலிருந்து புறப்பட்டு 10 மணிக்கு திருத்தலம் சென்றடைந்தனர். தேநீர் அருந்தியபின் நல்லாயன் நிலையத்தின் இயக்குநர் அருள்பணி. அம்புரோஸ் அவர்கள் "எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது" என்னும் மையக்கருத்தில் யூபிலி சிறப்புரை வழங்கி அனைவரையும் எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் வாழ அழைத்தார்.



அவரைத் தொடர்ந்து இயேசு அவையைச் சார்ந்த அருள்பணி. ஜேம்ஸ் பாரதபுத்ரா சே.ச. அவர்கள் தம் பணிவாழ்வு அனுபவத்தை பகிர்ந்து அனைவரின் நெஞ்சத்தையும் நெகிழச்செய்து அனைவருக்குள்ளும் எதிர்நோக்கின் விதையை விதைத்தார்.




காலை 11:30 மணிக்கு மலையடிப்பட்டி பங்குப்பணியாளர் அருள்பணி. விக்டர் ஜெயபாலன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி மறையுரை ஆற்றினார். நண்பகல் உணவுக்குப்பின் மனமகிழ்வு நேரத்தில் பங்கேற்பாளர்கள் அனைவரையும் நான்கு குழுக்களாகப் பிரித்து விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.









மாலை 3:30 மணிக்கு மலையடிப்பட்டி பங்கு ஆலயங்களைச் சந்தித்தப்பின் பொன்னணியாறு அணைக்குச் சென்று இயற்கையை ரசித்து, பூங்காவில் விளையாடி மகிழ்ந்திருந்தனர். பின். தேநீர். அருந்தி இரவு 7. மணிக்கு திருச்சியை வந்தடைந்து, அவரவர் இல்லத்திற்கு மனநிறைவுடன் திரும்பினர். இந்த நிகழ்விற்கு இடம் நல்கி ஏற்பாடுகள் செய்த அருள்பணி. விக்டர் ஜெயபாலன், மிகவும் உழைத்த வேதியர் திருமதி. பவுலின், உற்சாகமூட்டும் உரைகள் வழங்கிய அருள்பணி. அம்புரோஸ், அருள்பணி.ஜேம்ஸ் பாரதபுத்ரா ஆகியோருக்கு சிறப்பான நன்றிகள்.
















பொன்னணியாறு
அணை

# பீடச் சிறார் யூபிலி மாநாடு – திருச்சி (20.07.2025)

**20.07.2025 ஞாயிறு அன்று, திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவால் வழிநடத்தப்பட்ட பீடச் சிறார் யூபிலி மாநாடு, மறைமாவட்ட ஆயர் மேதகு. ச.ஆரோக்கியராஜ் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.**

கொண்டாட்ட நிகழ்வுகள்: பீடச் சிறார் யூபிலி மாநாடு காலை 9 மணிக்கு வருகைப் பதிவுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து ஆடிப் பாடி மகிழ்வோம் என்னும் நோக்கில் தன்னார்வ வேதியர்கள் மறைக்கல்விப் பாடல்கள் கற்றுத் தந்தனர். பின்பு காலை 10.15 மணிக்கு பீடச் சிறார் அனைவரும் பீடப் பணிக்கான சீருடையுடன் பேண்டு வாத்தியம் முழங்கிட, பேராலயத்தைச் சுற்றி யூபிலி சிறப்புப் பவனியில் மகிழ்வுடன் பங்கெடுத்தனர். பின் ஆயர், அருள்பணியாளர்களுடன் அனைவரும் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். காலை 10.30 மணிக்கு ஆயரின் தலைமையில் பேராலயத்தில் மறைமாவட்ட பீடச் சிறாருக்காக சிறப்பு யூபிலித் திருப்பலி நடைபெற்றது. இத்திருப்பலியில் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் பேரருள்பணி. அந்துவான், புனித அகுஸ்தினார் இளங்குருமட அதிபர் அருள்பணி. சூசை அலங்காரம், பணிக்குழுச் செயலர் அருள்பணி. மரியசூசை ஆகியோர் கலந்துகொண்டு பீடச் சிறாருக்காக செபித்தனர். திருப்பலி முடிவில் யூபிலி நினைவாக அனைத்து பீடச் சிறாரும் பீடப்பணி செய்கையில் அணிவதற்கான சிறப்பு சிலுவை ஆயரால் மந்திரிக்கப்பட்டு, பீடச் சிறாருக்கு அணிவிக்கப்பட்டது.









திருச்சி மறைமாவட்ட
பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் — 2025








திருச்சி மறைமாவட்ட




திருச்சி மறைமாவட்ட
பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் – 2025





இடைவேளையில் அனைவருக்கும் பிஸ்கெட் வழங்கப்பட்டது. பின்பு மதியம் 12 மணிக்கு உலக மீட்பர் பசிலிக்காவின் அதிபரும் பங்குப் பணியாளருமாகிய அருள்பணி. ஆல்பர்ட் அவர்கள் பீடச் சிறார் மாநாட்டின் சிறப்புரை வழங்கினார். பின்பு ஆண்களுக்கு இறையழைத்தல் ஊக்கவுரையை அருள்பணி. சூசை அலங்காரம் அவர்களும், பெண்களுக்கு அருள்சகோ. ஜெஸ்ஸி, அருள்சகோ. ஜெயக்கொடி அவர்களும் வழங்கினர். மதியம் 1.15 மணிக்கு அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு இயேசுவின் இறுதி இரவு உணவு என்னும் தலைப்பில் பீடச்சிறார்களால் ஊமை நாடகம் நடிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 16 பங்குகளிலிருந்து 195 பேர் பங்கெடுத்தனர். பின்னர் மறைக்கல்விப் பாடல்கள் கற்றுத்தரப்பட்டன. பின்னர் மறைமாவட்ட மேய்ப்புப்பணி நடுவத்தின் இயக்குநர் அருள்பணி. அம்புரோஸ் அவர்களும் ஆவூர் பங்குப் பணியாளர் அருள்பணி. சூசைராஜ் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் அனைவருக்கும் பரிசளிக்கப்பட்டன. மாலை 4 மணிக்கு அனைவருக்கும் குளிர் பானம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் நன்றி பாராட்டி மாநாடு இனிதே நிறைவுபெற்றது. மாநாட்டிற்கு இடம் கொடுத்த பேராலயப் பங்குப் பணியாளர் அருள்பணி. சவரிராஜ், உதவிப் பங்குப்பணியாளர் அருள்பணி. சார்லஸ், மாநாட்டில் மிகவும் உதவிய வேதியர்கள், ஈடுபட்டு உழைத்த தன்னார்வ வேதியர்கள், உறுதுணையாயிருந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் நன்றியும் பாராட்டும்! மாநாட்டில் தங்கள் பங்கு பீடச் சிறாரைக் காண, அவ்வப்போது வந்திருந்து வாழ்த்திச் சென்ற அருள்பணியாளர்கள், அருள்சகோதரர்கள், அருள்சகோதரிகளுக்கும் நன்றியும் பாராட்டும்!







பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் — 2025










திருச்சி மறைமாவட்ட
பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் — 2025




திருச்சி மறைமாவட்ட




திருச்சி மறைமாவட்ட




திருச்சி மறைமாவட்ட
பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் — 2025



திருச்சி மறைமாவட்ட
பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் – 2025




திருச்சி மறைமாவட்ட
யூபிலி கொண்டாட்டம் – 2025










## இந்தப் பீடச் சிறார் யூபிலி மாநாட்டுக் கொண்டாட்டத்தில் பின்வரும் பங்குகள் பங்கேற்றன.

புத்தூர் மறைவட்டம்: கத்தீட்ரல் (24), துரைசாமிபுரம் (15), பழையகோவில் (16), பெட்டவாய்த்தலை (6), புத்தூர் (21), தெப்பக்குளம் (9), தெரசாள்புரம் (10), உறையூர் (10), அருங்கொடை இல்லம் (9).

கிராப்பட்டி மறைவட்டம்: அம்மாப்பேட்டை (15), அம்சம் (8), கிராப்பட்டி (16), பாத்திமா நகர் (13), ஜெகன் மாதா (16), கே.கே.நகர் (10), கல்லுக்குழி (9), கருமண்டபம் (14), நாகமங்கலம் (25), துறைக்குடி (7), ஆலம்பட்டி புதூர் (11).

பொன்மலை மறைவட்டம்: அம்பிகாபுரம் (15), ஆர்.கே.புரம் (52), கைலாசபுரம் (11), காமராஜ் நகர் (18), காட்டூர் (32), கொட்டப்பட்டு (3), லூர்து நகர் (22), முல்லைக்குடி (6), துப்பாக்கித் தொழிற்சாலை (20), பத்தாளப்பேட்டை (9), பொன்மலை (10), செம்பட்டு (12), சுப்ரமணியபுரம் (14), திருநகர் (8), வாழவந்தான்கோட்டை முகாம் (8).

கீரனூர் மறைவட்டம்: ஆவூர் (9), காயாம்பட்டி (17), கீரனூர் (14), மலம்பட்டி (3), நாஞ்சூர் (7), திருமலைராயபுரம் (12), மாத்தூர் (15).

இவ்வாறு, புத்தூர் மறைவட்டத்தின் 9 பங்குகளிலிருந்து 103 பீடச் சிறாரும் 17 ஒருங்கிணைப்பாளர்களும், கிராப்பட்டி மறைவட்டத்தின் 11 பங்குகளிலிருந்து 128 பீடச் சிறாரும் 16 ஒருங்கிணைப்பாளர்களும், பொன்மலை மறைவட்டத்தின் 15 பங்குகளிலிருந்து 211 பீடச் சிறாரும் 29 ஒருங்கிணைப்பாளர்களும், கீரனூர் மறைவட்டத்தின் 7 பங்குகளிலிருந்து 68 பீடச் சிறாரும் 9 ஒருங்கிணைப்பாளர்களும் பங்கேற்றனர். ஆக மொத்தம் 42 பங்குகளைச் சார்ந்த 510 பீடச் சிறாரும் 71 ஒருங்கிணைப்பாளர்களும் இந்த யூபிலி மாநாட்டில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.